(பிற்பகல் 1–00)

(7) அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஊ) பேரவை அலுவல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

1979-ம் ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 25-ஆம் தேதி (புதன்கிழமை)	நிதி ஒதுக்க சட்டமுன்வடிவுகளை ஆய்வு செய்தலும், நிறைவேற்றலும். 1 தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 3) சட்ட முன்வடிவு. 2 தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 4) சட்ட முன்வடிவு. 3 தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 5) சட்ட முன்வடிவு. 4 தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு.
1979-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 26-ஆம் தேதி (வியாழக்கிழமை). 1979-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 27-ஆம் தேதி (வெள்ளிக்கிழமை).	1979–80-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின் வாரியத்தின் நிதி நிலை அறிக்கை மீது விவாதம்.
1979-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28-ம் தேதி (சனிக்கிழமை).	அரசினர் சட்ட முன்வடிவுகளும், அரிசினர் தீர்மானங்களும்.

தேவையிருப்பின் பேரவை மாலையிலும் கூடும்.

பேரவை வழக்கப்போல் காலை 9 மணிக்கு கூடும்.

(6) அரசினர் சட்ட முன்வடிவுகள்-தொடர்ச்சி.

(எ) நிதி ஒதுக்க (எண்.3) சட்ட முன்வடிவு, 1979 (தொடர்ச்சி)

திரு. எம். ஏ. லத்தீப் : பேரவைத் தலைவர் அவர்களே, நிதி ஒதுக்க சட்டமுனவடிவுகள் மீது என்னுடைய கருத்துக்களை இங்கே இணைத்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.